நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 24 /2025**

**P.W. 5 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாதேசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | நாச்சிமுத்து |
| கிராமம் | : | சிங்கிரிப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW 5 |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 08–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 01.13PM

1. நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 14.07.2024ம் தேதி மேட்டூர் காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது மேட்டூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற இண்டிமேசனை பெற்று பின்பு

மேட்டுர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த பாண்டுரங்கன் மனைவி மகேஸ்வரி வயது 57 என்பவரிடம் மேட்டுர் அரசு மருத்துவமனையில் பணியில் உள்ள காவலர் உதவியுடன் வாக்குமூலம் பதிவு செய்து பின்பு நிலையம் வந்து அன்றைய தினமே காலை 9.00 மணிக்கு நிலைய சி.எஸ்.ஆர். 212/2024 ஆக பதிவு செய்து மனு ரசீது கொடுத்து இரு தரப்பினரும் உறவினர்கள் என்பதால் வாதியின் விருப்பத்தின்பேரில் நான் முதற்கட்ட விசாரணை செய்தேன்.

2. பின்பு இருவரும் சுமூகமான தீர்வு ஏற்படாததால் வாதி சட்டப்பூர்வமான நடவடிக்கை வேண்டும் என கேட்டதன்பேரில் நிலைய குற்ற எண். 203/2024 U/s. 296(b), 118(1), 351(2) BNS மற்றும் பிரிவு 4 TNPHW ACTன் கீழ் எதிரியின் மீது பதிவு செய்தேன். மேலும் முதல் தகவல் அறிக்கை அசலுடன் வாதியின் வாக்குமூல புகாரை இணைத்து கனம் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் முதல் தகவல் அறிக்கையின் நகல் ஒன்றை புலன் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் சாரதா அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ( **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ .4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மேட்டுர் அரசு மருத்துவமனையில் இருந்து சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் பெறப்பட்ட தகவலின் அசல் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. மேலும் ஏற்கனவே இந்த வழக்கில் இறுதி அறிக்கையுடன் ஒளி அச்சு நகலாக தாக்கல் செய்யப்பட்ட புகார் ரசீது தற்பொழுது மேற்படி ரசீது வழங்கிய சம்பந்தபட்ட சிறப்பு காவல் உதவி ஆய்வாளரான ஆஜர் சாட்சி மாதேசன் இந்த நீதிமன்றத்தின் முன்னிலையில் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ரசீது அசலை இந்த வழக்கின் எதிரி சம்பந்தபட்ட அமர்வு வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அதனால் மேற்படி ஆவணத்தை சான்றிட்டு இந்த வழக்கில் தாக்கல் செய்கிறேன்.(மேற்படி 14.07.2024ம் தேதியிட்டு வழங்கப்பட்ட ரசீதின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்ய அது ஒளி அச்சு நகல் என்பதை காரணம் காட்டி கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார். மேற்படி முதல் நிலை சாட்சியமான அசல் ஆவணம் மாண்புமிகு அமர்வு நீதிமன்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதன் இரண்டாம் நிலை

சாட்சியமான சான்றிட்ட நகலை தாக்கல் செய்வதற்கு எந்த சட்டபூர்வமான தடையும் இல்லை என்பதாலும், மேற்படி ரசீது வழங்கிய நபர் தான் சான்றிட்டு தாக்கல் செய்துள்ளதாலும், ஆட்சேபனை நிலைக்க தக்கது அல்ல என நிராகரித்து இந்த நீதிமன்றம் உத்தவிடப்படுகிறது. (**மேற்படி 14.07.2024ம் தேதியிட்ட புகார் ரசீதின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–01.37PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**